# "நல்ல குறுந்தொகை" – ஒரு பார்வை

***செ. சத்யா***
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி
மயிலம்

**மலர்: 4**
**இதழ்: 1**
**மாதம்: ஜூலை**
**வருடம்: 2019**
**ISSN: 2454-3993**

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கெனத் தனித்த ஓர் இடத்தைப் பெற்றிருப்பது பாட்டும் தொகையும் சேர்ந்த தொகுப்பான சங்க இலக்கியத் தொகுப்பாகும். சங்க இலக்கியங்களாக எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் அமைகின்றன. பாட்டென்ப பத்துப்பாட்டு. இவை பத்து நெடும்பாடல்களின் தொகுதியாகும். தொகையென்பது எட்டுத்தொகை. இவை பல்வேறு புலவர்கள் பலரால் பாடப்பெற்ற தனித்தனி உதிரிப் பாடல்களின் தொகுப்பாகும். பல புலவர்களால் பல்வேறு காலங்களில் பாடப்பட்ட பாடல்களை அடிவரையறைக்கேற்பத் தொகுத் அமைத்ததால் ''தொகை நூல்'' என்றனர்.

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறமென்று**
**இத்திறத்த எட்டுத்தொகை"**

**-(உ.வே.சா., முகவுரை:2000)**

என்னும் பழம்பெரும் பாடல் எட்டுத்தொகை நூல்களைப் பட்டியலிடுகிறது. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநுறூறு, கலித்தொகை, அகநானூறு எனும் ஐந்தும் அகம் பற்றியும், பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய இரண்டும் புறம் பற்றியும், பரிபாடல் ஒன்று மட்டும் அகமும் புறமும் சேர்ந்து அமைந்துள்ளது.

**நூல் அமைப்பு**

தொகைநூல்கள் எட்டினுள் முதலில் தொகுக்கப்பெற்றது எனும் சிறப்பிற்குரியது "குறுந்தொகையே". இந்நூல் 4 அடி சிற்றெல்லையும் 8 அடி பேரெல்லையும் கொண்டது. குறைந்த அடிகளையுடைய பாட்டால் தொகுக்கப்பட்ட நூல் ஆதலால் "குறுந்தொகை" எனப்பட்டது. இந்நூல் அகப்பொருள் பற்றிய செய்திகளைக் கூறுகின்றது. இந்நூல் கடவுள் வாழ்த்துப் பாடல் நீங்களாக 401 பாடல்களைக் கொண்டது. "நல்ல குறுந்தொகை நானூறு" என இறையனார் களவியல் உரையாளரால் சிறப்பிக்கப் பெறுவது. இந்நூலினைத் தொகுத்தவர் பூரிக்கோ.

குறுந்தொகை "ஆசிரியப்பா" என்னும் யாப்பில் அமைந்த பாடல்களையுடைய தொகை நூலாகும். 401 பாடல்களுள் பாடல் எண் 16,18,63,113,222 ஆகிய ஐந்து பாடல்களும் "நிலைமண்டில ஆசிரியப்பா" என்னும் யாப்பு வகையாகவும், பிற அனைத்தும் "நேரிசை ஆசிரியப்பா" என்னும் யாப்பிற்கு உடையது. இவை, ஐங்குநூறு, அகநானூறு போன்று திணைவாரியாக இல்லாமல் ஆங்காங்கே கலந்து கிடக்கின்றன. இந்நூலில் "குறிஞ்சித் திணைப்பாடல்கள் 146, முல்லைத்திணைப் பாடல்கள் 45, மருதத்திணைப் பாடல்கள் 48, நெய்தல் திணைப்பாடல்கள் 69, பாலைத் திணைப் பாடல்கள் 93 என மொத்தம் 401 பாடல்கள் அமைந்துள்ளன" (கு.மா. பாலசுப்பிரமணியம், 2007:264) கடவுள் வாழ்த்துப்பாடல் பின்னால் சேர்க்கப்பட்டது. குறுந்தொகை நானூறு என்பது தாம் இந்நூலின் பெயராகும். கடவுள் வாழ்த்து நீங்களாக 400 பாடல்கள் தான் இருக்க வேண்டும். ஒரு பாடல் மிகுதியாக உள்ளது. இந்நூலில் 307 மற்றும் 391 பாடல்கள் 9 அடிகளாக அமைந்துள்ளது.

குறுந்தொகையில் இடம்பெற்றிருக்கும் பாடல்(அடி) விபரங்கள்

4 முதல் 8 அடி வரையிலான அடி விகற்பங்களுடைய பாடல்கள் குறுந்தொகையில் தொகுக்கப்பட்டுள்ளன.

4 அடி பாடல்களாக 39 பாடல்களும்,
5 அடி பாடல்களாக 89 பாடல்களும்,
6 அடி பாடல்களாக 93 பாடல்களும்,
7 அடி பாடல்களாக 102 பாடல்களும்,
8 அடி பாடல்களாக 76 பாடல்களும்,
9 அடி பாடல்களாக 2 பாடல்களும் இந்நூலில் அமைந்துள்ளன.

**குறுந்தொகை ஆசிரியர்கள்**

கடவுள் வாழ்த்துப்பாடலைப் பாடிய "பாரதம் பாடிய பெருந்தேவனார்" பெயரை நீக்கிவிட்டால், 205 புலவர்கள் பெயர்களை மட்டுமே அறியமுடிகின்றது. ஒவ்வொரு பாடலடிகளின் இறுதியிலும் பாடியவர் பெயர் காணப்படுகின்றது. அவர்கள் பாடிய பாடல்களில் உள்ள சொற்றொடர்களே இப்புலவர்களுக்குப் பெயர்களாக அமைந்துள்ளன.

தொடரால் பெயர் பெற்ற புலவர்கள் 19 பேர்கள் ஆவர். மேலும், 10 பாடல்களில் (191, 201, 256, 313, 321, 324, 375, 379, 381, 395) ஆசிரியர் பெயர் குறிக்கப்படாமல் உள்ளதால் இவற்றைப் பாடியவர்கள் யாரெனத் தெரியவில்லை.

**குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள செய்திகள்**

குறுந்தொகைப் பாடல்கள் அனைத்தும் அகப்பொருள் பற்றியே எடுத்துரைக்கின்றது. ஒருவனும் ஒருத்தியும் கூடி இன்புற்று மகிழும் இன்பமே அகப்பொருளாகும்.

சங்க இலக்கியத்தில் பெயர்களைச் சுட்டாமல், தலைவன், தலைவி என்று கூறுவதை மரபாகக் கொண்டனர் என்பதனை,

**“மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்**
**சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறா அர்”**
**-(தொல்.அகம்.57)**

என்ற நூற்பா வழி அறியலாம். அகப்பொருள் செய்தியை ஐந்து திணைகளுள் கூறுகின்றனர். அவை, குறிஞ்சித் திணை, பாலைத்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல் திணை போன்றவைகளாகும். இங்கு திணை என்பது ஒழுக்கம் எனலாம். “திணை இலக்கணம் தமிழுக்கே உரியது. பிற மொழியின்கண் காணப் பெறாதது என்பர்” மா.பொ.சிவஞானம். (கு.வெ. பாலசுப்பிரமணியன், 2008:134).

அகப்பாடல்கள் முதல், கரு, உரி ஆகிய முப்பொருளும் அமைந்து வரல் வேண்டும் என்பது அகவிலக்கணக் கோட்பாடு. இம்மூன்றனுள் முதல், கரு இல்லாவிட்டாலும் உரிப்பொருள் கட்டாயம் அமைந்திருக்கும். அவ்வாறு இல்லையெனில் அது அகப்பாடல் எனக் கொள்ளப்படுவதில்லை. 4அடி சிற்றெல்லையும், 8 அடி பேரெல்லையும் கொண்ட ஆசிரியப்பாக்களால் அமைந்துள்ள “குறுந்தொகையில் உரிப்பொருள் மட்டுமே இடம்பெறும் பாடல்கள் மிகுந்து காணப்படுகிறன”. (மூ.மூர்த்தி, 2007:675) ஏனெனில் குறுந்தொகைப் பாடல்கள் ஒவ்வொன்றும் உரிப்பொருளுக்கே சிறப்பிடம் தந்துள்ளன. குறிஞ்சிக்குப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும், முல்லைக்கு இருத்தலும் இருத்தல் நிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் பிரிதல் நிமித்தமும், மருதத்திற்கு ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய்தலுக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும் உரிப்பொருளாகும். இதன் காலம் கி.பி.2ஆம் நூற்றாண்டு என்று அறிஞர் கருதுவர்.

## குறுந்தொகையின் சிறப்புகள்

“எட்டுத்தொகை நூல்களுள் உரிப்பொருள் சிறந்த குறுந்தொகையை” பலர் கற்பராயினர். “பலர் கற்கும் நூலாகத் திகழ்ந்தமையின் உரையாசிரியர்களும் குறுந்தொகையிலிருந்தே பெரிதும் மேற்கோள் காட்டுவராயினர்” என்னும் வ.சு.ப மாணிக்கனாரின் கருத்தால் இவற்றின் சிற்ப்பினை உணரலாம்.

“தொல்காப்பியம் முதலிய இலக்கண நூலிலும், சிலப்பதிகாரம் போன்ற இலக்கிய நூல்களின் உரைகளிலும் இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள் குறுந்தொகைப் பாடல்களையே மிகுதியாக எடுத்தாண்டுள்ளனர். இந்நூலின் 165 பாடல்களே பிற நூலுரைகளில் மேற்கோளாகக் காட்டப் பெறாதவை”. (காளிமுத்து, தொல்காப்பிய இலக்கிய கொள்கைகளும், குறுந்தொகையும்)

29 உரையாசிரியர்கள் குறுந்தொகையின் 236 பாடல்களை மேற்கோளாக எடுத்தாண்ட பெருமை உடையது. குறுந்தொகை நூலானது அதிகமான பதிப்பு மற்றும் மேற்கோள் உடையது. அதிகமானோர் உரைகண்டது.

இளம்பூரணர் தன்னுடைய தொல்காப்பிய உரையில் குறுந்தொகைப் பாடல்களை 126 இடங்களில் பயன்படுத்தியுள்ளார். பேராசிரியர் 103 இடங்களிலும், நம்பியகப் பொருள் உரையில் 59 இடங்களிலும் குறுந்தொகைப் பாடல்கள், மேற்கோளாக, கையாளப் பட்டுள்ளன. நச்சினார்க்கினியர் தனது தொல்காப்பிய உரையில் 223 இடங்களில் குறுந்தொகைப் பாடல்களை எடுத்தாண்டுள்ளார்.

குறுந்தொகையில் 20 பாடல்கள் நீங்கலாக ஏனைய 380 பாடல்களுக்கு

பேராசிரியர் உரை எழுதியுள்ளார். அவர் எழுதாத ஏனைய 20 பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார்.

> **"நல்வறிவுடைய தொல்பேர் ஆசான்**
> **கல்வியிங்காட்சி காசினியறியப்**
> **பொருள்தெரி குறுந்தொகை இருபது பாட்டிற்கு**
> **இதுபொருள் என்றவன் எழுதாது ஒழிய**
> **இதுபொருள் என்பதற்கு ஏற்ப உரைத்தும்**
> **தண்டமிழ் தெரிந்த வண்புகழ் மறையோன்"**
>
> **-(உ.வே.சா., 2000:முகவுரை)**

என்று நச்சினார்க்கினியர் எழுதிய உரை சிறப்புப் பாயிரத்தில் அறியலாம். இவ்விரு உரைகளும் கிடைக்கப்பெறவில்லை. "நாவலர்களால் "நல்ல" என்னும் அடைமொழியோடு அழைக்கப்படும் சிறப்பைப் பெற்றது "குறுந்தொகை".

உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல் குறுந்தொகை என்பதை அறியும் பொழுது குறுந்தொகையின் சிறப்பையும், மேன்மையையும் அறியமுடிகின்றது.

## முடிவுரை

"நல்ல குறுந்தொகை" என்ற அடைமொழியுடன் குறிக்கப்படும் குறுந்தொகைப் பாடல்கள் கருத்தாழம் மிக்கனவாகவும், பொருளாழம் மிக்கனவாகவும் விளங்குவதுடன், மொழி வளமும், பொருள்களின் இயற்கையை உள்ளபடி எடுத்துக் கூறும் ஆற்றலும், உவமை அழகும், இனிமையும் நிறைந்துள்ளன. தமிழர் வாழ்வின் பண்பாடு, சமுதாய அமைப்பு, விருந்தோம்பல், தொழில், சடங்குகள், நம்பிக்கைகள், அறநெறிக்கொள்கை, கலைகள், ஆட்சி, கொடை போன்றவற்றைத் அறிந்து கொள்வதற்குரிய களஞ்சியமாக குறுந்தொகை இலக்கியம் திகழ்கிறது.